திரு. கோவை செழியன் : கிளாரிபிகேஷன் என்று கேட்டால் நீங்கள் அனுமதிக்க மாட்டேன் என்கிறீர்கள். அதனால் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கிறேன். கிளாரிபிகேஷன் என்று கேட்டால் உடனே உட்கார் என்று தீர்ப்பு சொல்லிவிடுகிறீர்கள். ஆகவேதான் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையிலே ஒரு உறுப்பினர் தான் என்ன வேண்டுமானாலும் பேசலாம், எப்போது வேண்டுமானாலும் எழுந்து நிற்கலாம், பேரவைத் தலைவர் ஒன்றும் சொல்லாமல் சும்மா உட்கார்ந்து இருக்க வேண்டுமென்றால் இங்கே பேரவைத் தலைவர் எதற்கு? நீங்களே இங்கே உட்கார்ந்து கொள்ளலாமே, பேரவைத் தலைவர் என்றால் அவருக்கு சில கடமைகள் இருக்கின்றன. சில விதி முறைகள் இருக்கின்றன. அதன்படி பேரவைத் தலைவர் நடந்துகொள்ளும்போது உறுப்பினர்கள் அதற்குக் கட்டுப்பட வேண்டும். கிளாரிபிகேஷன் என்றால் கிளாரிபிகேஷன் என்று கேளுங்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : As per Rule 237 of the Assembly Rules, the Hon. Speaker alone can give permission to publish the proceedings of the House in any newspaper. We would like to know whether any such permission has been obtained from you, Sir, to publish the speech of the Hon. Chief Minister, in the newspapers. We would like to know whether it has been done.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபாநாயகராக உட்கார்ந்து இருப்ப வரை யாரும் கொஸ்டின் பண்ண முடியாது. பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் அது விதிமுறைகளின்படி பாயின்ட் ஆப் ஆர்டராக இருக்க வேண்டும்.

வேலூர் மருத்துவ மனை பற்றி சில உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தார்கள். அதற்கு முதலமைச்சரவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். அவர் பேசிய பேச்சு பத்திரிகைகளில் வெளியாகி இருக்கிறது. இதுபற்றிய என்னுடைய தீர்ப்பை நாளை தெரிவிக்கிறேன்.

3. தகவல் கோரல்.

மத்திய அரசிடமிருந்து உதவி கோர மாட்டேன் என முதல் அமைச்சர் சட்டப் பேரவை நடக்கும்போது, பேரவைக்கு வெளியே பேசியது குறித்து.

திரு. கோவை செழியன் : சார், பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு பேரவைத் தலைவரின் அனுமதி கிடைத்தால்தான் பேசலாம்.

திரு. கோவை செழியன்: இது ஒரு முக்கியமான "பர்னிங் ப்ராபிளம்." அதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நேற்று முதலமைச்சர் பேசும்போது இனி மத்திய அரசிடம் பணம் கேட்க மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது நம்முடைய மாநிலம் மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கின்றது. மத்திய அரசின் உதவி இல்லாவிட்டால் இன்னும் நிலைமை மோசமாகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சி. எம். சி. அல்ல.

திரு. கோவை செழியன்: மத்திய நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒன்றை பேசியிருக்கிறார்கள். அதற்கு பதில் சொல்லும் வகையில் நம்முடைய முதலமைச்சர் எங்களுக்கு இனிமேல் மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான உதவியும் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே நாம் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இராமநாதபுரம் மாவட்டம் போன்ற மாவட்டங்களுக்கு இதுபோன்ற உதவி இல்லாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது கொடுத்த பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்று மத்திய நிதி-அமைச்சர் கேட்டிருக்கிறார். அதற்கு பதில் சொல்லும் முறையில் இனி பணமே வேண்டாமென்று சொல்லியிருப்பது ஒரு அச்சத்தை, கவலையை அளித்திருக்கிறது. ஆகவேதான் அதைப்பற்றி விளக்குவதற்காக......

DR. H. V. HANDE: I am raising a very valid point of order. Usually the convention in this House has been such that when the House is in session, important policy statements would be made only in the House. I am not going into the merits or de-merits of this since a point of clarification has been asked. Whenever a policy statement is made by the Finance Minister and here the Chief Minister, it is usually done by a statement under Rule 82 in this House. The Chief Minister has also given a promise that it would be done so several times.

இதுமாதிரியான ஒரு நிலை வரும்போது இங்கே வந்து சொல்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

In fact, whenever he attends a press conference in Tiruchirappalli or Thanjavur he used to say 'I will not answer you now but I will answer the same in the Assembly'. I used to appreciate that stand. He then has made statements only in the House. Probably in a moment of irritation at what the Hon. Sri C. Subramaniam had spoken, at the spur of the moment, in a spirit of haste, he might have made that statement that he was not going to ask for Central funds hereafter for drought relief. It is an important policy statement and he has made that outside the House and that too, when the budget session of the Assembly is going on. I would like to know whether such a departure from normal convention is correct. I would like to have your specific ruling on this.

28 மத்திய அரசிடமிருந்து உதவி கோரமாட்டேன் என முதல் அமைச்சர் சட்டப் பேரவை நடக்கும்போது பேரவைக்கு வெளியே பேசியது குறித்து.

[1975 மார்ச் 17

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மத்திய நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சென்னை தியாகராயநகர் தெருவிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் (கரவொலி) (குறுக்கீடு) ஆம். தெருவிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசிய பேச்சுக்கு நான் சென்னை புதுப்பேட்டை தெருவிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பதில் சொன்னேன். சுப்பிரமணியம் நாடாளுமன்றத்தில் பேசிய பேச்சாக இருந்தால், அதற்கு நான் சட்டமன்றம் நடக்கும்போது சட்ட சபையில் பதில் சொல்ல வேண்டியது முறை என்று ஹாண்டே அவர்கள் சொல்வதை ஒத்துக் கொள்வேன். சுப்பிரமணியம் பொதுக் கூட்டத்தில் ஒரு கருத்தைச் சொன்னார். அதற்கு மற்றொரு பொதுக் கூட்டத்தில் நான் என்னுடைய கருத்தைச் சொன்னேன்.

இந்த மாநிலத்தின் வறட்சி நிவாரணத்திற்கு மத்திய நிதி உதவி கோரி ரூபாய் $7\frac{1}{2}$ கோடி தருவதாகச் சொல்லி $6\frac{1}{2}$ கோடி ரூபாய் வரை கொடுத்திருக்கிறார்கள். ஒரு பொறுப்புள்ள நிதி அமைச்சர் மத்திய பேரரசிலே வீற்றிருப்பவர் தமிழகத்திற்கு வரும்போது என்னை அழைத்து, நான் ஒரு முதலமைச்சர் என்ற முறையில் பேசுவது ஒன்றும் முரண்பாடான காரியமல்ல, இதற்கு முன்பு நடக்காததுமல்ல, முன் பொரு முறை அவர் வந்தது போல இப்போதும் தலைமைச் செயலகத்திற்குக் கூட வந்து அதிகாரிகளைக் கூட்டி வைத்து ரூபாய் $7\frac{1}{2}$ கோடி என்னவாயிற்று ? எவ்வளவு செலவு செய்திருக்கிறீர்கள் ? வறட்சிப் பணிகள் எப்படி நடைபெற்றிருக்கின்றன ? என்று என்னோடும், தொடர்புடைய அமைச்சர்களோடும் கலந்து பேசி, வேகமாக இந்தப் பணிகள் எப்படி நடைபெற வேண்டும் என்று யோசனை சொல்லி இருந்தால் நான் அதை வரவேற்பேன். இன்னின்ன தவறுகள் நடைபெறுவதாகக் கேள்விப்பட்டேன். அவைகளையெல்லாம் சரிசெய்ய வேண்டும் என்று யோசனை சொல்லியிருந்தால் அதையும் வரவேற்றிருக்கலாம்.

அதற்குப் பதிலாக ஒரு பொதுக் கூட்டத்தில் போய் மத்திய அமைச்சர் ஒருவர் இப்படி "நாங்கள் கொடுத்திருக்கிற பணம் ஒழுங்காகச் செலவு செய்யப்பட்டிருக்கும் என்று நம்புகிறேன். மேற்பார்வையிட அடுத்த மாதம் வரப்போகிறேன்." என்றெல்லாம் பேசுவதும், அதை நான் கண்காணிக்கப் போகிறேன் என்று கூறுவதும், ஏதோ மத்திய அரசில் இருப்பவர்கள் தான் மிகவும் புனிதமான புத்தர்கள், நபிகள், ஏசு நாதர்கள் ; மாநிலத்தில் இருப்பவர்கள் எல்லாம் ஊதாரிகள், ஊழல் பேர்வழிகள் என்று எண்ணிக் கொண்டு பேசுவதும் முறையல்ல.

இந்தப் பிரச்சினை எழுந்த காரணத்தால் இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். சென்ட்ரல் அசிஸ்டண்ஸ் என்ற பெயரால் நமது ஆண்டுத் திட்டத்திற்கு 41 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. 143 கோடி ரூபாய்க்கு ஒப்புதல்தான் வழங்கப்படுகிறது. மத்திய உதவி 41 கோடி என்பதில், 70 சதவிகிதம் கடனாகவும் 30 சதவிகிதம் தான் மானியமாகவும் வழங்கப்படுகிறது. அதற்கு உட்பட்டுத்தான் இப்போது தந்திருக்கின்ற $6\frac{1}{2}$ கோடி ரூபாயும் இருக்கும். "வறட்சிக்காக தனியாக ஒதுக்கப்படுவதில்லை ; திட்டச் செலவில்தான் குறைத்துக் கொள்வோம்" என்று அவர்கள் அழுத்

தந்திருத்தமாகச் சொல்லிவிட்டார்கள். ஆக நடப்பாண்டில் வறட்சிக்காக இப்போது தந்திருக்கின்ற 6½ கோடியில் 70 சதவிகிதம் கடன்; 30 சதவிகிதம் தான் மானியம். இதற்குத்தான் இந்தப் பாடுபடுத்துகிறார்கள்.

இதே நேரத்தில் நாங்கள் கணக்கு காட்ட முடியாது என்று மறுக்கவில்லை. ஆனால் இவர்கள் மட்டுமே கணக்கு காட்ட வேண்டுமென்று கேட்க உரிமை படைத்தவர்களா என்றால் இல்லை. (காவொலி) ஆனால் இந்த அரசின் மீது மாசு கற்பிக்கப்படுகிறது என்பதற்காக அந்தக் கணக்கைக் காட்டத் தயாராக இருக்கிறேன். அதை இந்த மன்றத்திலும் குறிப்பிட்டிருக்கிறேன். அக்கவுண்டண்ட்-ஜெனரல், ஆடிட்டர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பார்க்கச் சொல்லலாம். அதிகாரிகளை எல்லாம் கூட்டி ஒரு மாநாடே போட்டு, என்னையும் உட்காரவைத்துக் கொண்டு, ஒரு பொறுப்புள்ள நிதியமைச்சர் செய்திருந்தால், நான் மனம் மகிழ்ந்து பாராட்டியிருப்பேன்.

பிரம்மானந்த ரெட்டியும் வந்தார்; அவர் உள்துறை அமைச்சர்; வேலூர் மருத்துவ மனையில் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டது பற்றி அறிக்கை விட்டார். "கருணாநிதியுடன் அதிகாரப் பூர்வமாக அல்ல; தோழமை முறையில் ராஜ்பவனில் பேசினேன்; வேலூர் விவகாரத்தில் ஒரு நல்ல முடிவை எடுத்திருப்பதற்காக நான் முதலமைச்சருடைய பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன்; இந்த முடிவிற்கு மகிழ்ச்சி தெரிவிக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார். அவர் ரொம்ப பெரிய மனிதர்; அவ்வளவு பொறுப்போடு மத்திய அமைச்சர்கள் நடந்து கொள்ள வேண்டும் எனபதற்காகத்தான் இதைச் சொன்னேன்.

மேற்பார்வை இடுவோம், கண்காணிப்போம் என்று சந்தேகக் கண்ணோட்டத்தோடு ஒரு மாநில அரசை மிக இழிவான முறையில் நடத்துவதாக இருந்தால் நாமெல்லாம் தமிழர்கள்; உணவை விட, வயிற்றைவிட மானம் பெரிது என்று மதிப்பவர்கள்; நாம் அவர்களிடம் கேட்பது பிச்சை அல்ல; நாம் கொடுத்த வரிப் பணத்திலிருந்து நமக்குத் தரவேண்டிய உரிமையைத்தான் கேட்கிறோம். இதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இனிமேல் உங்களை வறட்சி நிவாரண நிதி கேட்கப்போவதில்லை என்று சொன்னேன். சுப்பிரமணியம் நிதியமைச்சராக இருக்கிறவரை நிச்சயமாக கேட்கமாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எட்மண்ட் அவர்கள் இந்த விஷயம் குறித்தே உரிமைப் பிரச்சினை என்று கொடுத்திருக்கிறார். அவர்கள் அதைப் பற்றி என்ன சொல்லலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிற நேரத்தில் அந்தக் கட்சியில் இருக்கிறவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றும், கிளாரிபிகேஷன் என்றும் எழுப்பியிருக்கிறார்கள். (திருமதி அனந்தநாயகி எழுந்தார்கள்) நீங்கள் என்ன பாயிண்ட் எழுப்பப் போகிறீர்கள்?

திருமதி த. ந. அனந்தநாயகி: எல்லோரும் தமிழர்கள் தான்; மானம் உடையவர்கள் தான்; சொன்னவரும் தமிழர்தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழர்கள் என்பதாலேயே எல்லோரும் தமிழ் உணர்ச்சி படைத்தவர்களாக இருப்பதில்லை. மராட்டிய மாநிலத்தில் வறட்சி ஏற்பட்டபோது, 75 கோடி ரூபாய்க்கு மேல் அப்போது மத்திய நிதியமைச்சராக இருந்த திரு. சவான் வழங்கினார். அவர் மராட்டியர் என்று தன்னை மார்தட்டிச்சொல்லிக் கொள்ளலாம். நமக்கு அப்படி இல்லையே! நம்முடைய தலைவிதி இப்படி ஆகிவிட்டது! இதே அனந்தநாயகி அம்மையார் அப்போதே (கிருஷ்ணகிரி தேர்தலின் போது) இவரை (சுப்பிரமணியத்தை) அனுப்பாதீர்கள் என்று சொன்னார்; ஹாண்டேயும் இதே மன்றத்தில் சொன்னார். நான் பாவி; கேட்கவில்லை தவறு செய்துவிட்டேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: (சிரித்துக் கொண்டே) முதலமைச்சர் ரொம்ப டேஞ்சரஸ் மனிதராக இருக்கிறார். நான் எந்த கான்டெக்ஸ்டில் சொன்னேன் என்று பார்க்க வேண்டும். காங்கிரஸ் "ஓ" வில் இருந்தேன்—அது அப்போது சொன்னது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காங்கிரஸ் "ஓ" வில் இருந்தாலும், "ஆர்" இல் இருந்தாலும் உணர்வுகள் ஒன்றுதான்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: Does the ruling party realise that they have backed a wrong horse?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அம்மையார் அவர்களே! நிச்சயமாக அந்தக் குற்றத்தை உணர்கிறோம் (சிரிப்பு).

(4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

கொரக்கவாடி அங்காளம்மன் கோவில் மதில் சுவரும் மண்டபமும் இடிந்ததும், அதனால் ஏற்பட்ட உயிர்ச்சேதமும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்ததாக கொரக்கவாடி அங்காளம்மன் கோவில் மதில் சுவரும், மண்டபம் இடிந்து அதனால் 19 பேர்கள்—ஆறு குழந்தைகள் 4 பெண்கள் உள்பட—மரணமடைந்தது குறித்து விவாதிக்க வேண்டுமென்று திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. ஏ. சுப்பிரமணியம், திரு. என். கே. பழனிசாமி, திரு. ஜே. ஜேம்ஸ், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஆர். பொன்னப்ப நாடார் ஆகியோர் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். சுருக்கமாக இதற்கான அவசியத்தை எடுத்துச் சொல்ல திரு. ஆர். பொன்னப்ப நாடாரை அழைக்கின்றேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பேரவைத் தலைவர் அவர்களே' அண்மையில் நடந்த இந்த நிகழ்ச்சியைப் பற்றி இந்த மன்றத்தில் விவாதிக்க வேண்டுமென்பதற்காக இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இங்கே ஒரு விபத்து பயங்கரமான முறையில் ஏற்பட்டிருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்திலே நடந்த ஒரு திருவிழா